கடந்த 2023.12.16ம் திகதியில் நடாத்துவதற்காகத் திட்டமிடப்பட்டு தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, **வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - I(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2023 (2024) – கட்டம் 01, 02** என்பவற்றிற்கான பரீட்சையானது, **எதிர்வரும் 2024.03.30ம் திகதி சனிக்கிழமை** வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும்.

குறித்த பரீட்சையின் பொருட்டு தகைமை பெற்றிருந்த பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்த அனுமதி அட்டைகளையே (நீல நிறம்) மீளவும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், கால இடைவெளியைக் கருத்திலெடுத்து அசௌகரியங்களைத் தவிர்க்கும்பொருட்டு குறித்த அனுமதி அட்டைகள் (நீல நிறம்) இரத்துச்செய்யப்பட்டு, **புதிய அனுமதி அட்டைகள் (இளஞ்சிவப்பு)** வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே, 2024.03.15ம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கான புதிய அனுமதி அட்டை (இளஞ்சிவப்பு) கிடைக்கப்பெறாதவர்கள், வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 - 2219939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் 2024.03.15 – 2024.03.18ம் திகதி வரையான காலப்பகுதியினுள் (காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி.திருவாகரன்.**
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2024.03.13.